**செய்தி வெளியீடு எண்: 725** **நாள்: 30.11.2012**

# செய்தி வெளியீடு

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, மற்றும் யோகா & இயற்கை மருத்துவம் ஆகிய சிகிச்சை முறைகளில் மசாஜ், தொக்கணம், போன்ற இயன்முறை சிகிச்சை அளிக்க அதில் முறையான மருத்துவக் கல்வி நிலையங்களில் பயின்று தேர்ச்சிப் பெற்ற மருத்துவம் சார் மனிதவளம் போதுமான அளவு இல்லாததை கருத்தில் கொண்டு இந்திய மருத்துவ முறை சிகிச்சைகளுக்கு தேவைப்படும் மருத்துவம் சார் மனிதவளம் கிடைக்கச்செய்யும் நோக்குடன் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி ஆகிய இரண்டு நிலையங்களில் ஆண்டு ஒன்றிற்கு 50 மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகுக்கும் வீதம் "நர்சிங் தெரபிஸ்ட்" (Nursing Therapist) என்ற 2½ ஆண்டு பட்டயப் படிப்பு 2009–10ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இப்பட்டயப்படிப்பில் 2 ஆண்டுகள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, மற்றும் யோகா & இயற்கை மருத்துவம் ஆகியவற்றில் அந்தந்த சிகிச்சை முறை மருத்துவர்களால் பாடம் நடத்தப்பட்டு கடைசி 6 மாதங்கள் உள்ளுறைப் பயிற்சி வழங்கப்பட்டு பட்டய சான்றிதழ் வழங்கப்படுகிறது. இப்பட்டயப் படிப்பின் முதல் அணியில் 68 மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

2) முறையான மருத்துவக் கல்வி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்ற "நர்சிங் தெரபிஸ்ட்" (Nursing Therapist)–களுக்கு சந்தைத் தேவை உள்ளதால், நமது மாநிலத்தில் முதன் முறையாக தனியார் துறையில் செயல்பட்டு வரும் பல்வேறு பெரும் இந்திய முறை மருத்துவமனைகள் தங்களது தேவைக்கு முறையான பயிற்சி பெற்ற நபர்களை வளாக நேர்காணல் (Campus Interview) முறையில் தேர்வு செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தன் பேரில் பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் (CTMR) ஒருங்கிணைந்து தேர்ச்சி பெற்ற இரண்டு கல்லூரி மாணவர்களுக்கான வளாக நேர்காணல் 28.11.2012 அன்று நடத்தப்பட்டதில் ஸ்ரீ ராகவேந்திரா தண்டுவட சிறப்பு சிகிச்சை மையம்; டாக்டர் சிவராமன் ஆரோக்கிய சுகாதார கவனிப்பு மையம்; எஸ்.கே.எம். மருத்துவமனைகள், ஈரோடு; ஹெர்ப்ஸ்அலைவ், சென்னை; கோகிலா சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை; ஸ்வபிமான் ஆடிசம் சிகிச்சை மையம்; ராஜா சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை ஆகியவை கலந்து கொண்டு முதல் சுற்றில் 25 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பணிநியமனம் வழங்கியுள்ளன.

3) இவ்வளாக நேர்காணலின் போது தகுதியான மாணவர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 1.50 இலட்சம் ஆண்டு சம்பளமாக முன்னணி இந்திய முறை மருத்துவமனைகள் வழங்கி பணிநியமனம் செய்துகொண்டுள்ளன.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை
ஆணையர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**